# முதல் பருவ மதிப்பீடு 2025 - 26

## மாதிரி வினாத்தாள்

## Model Question Paper

## தமிழ் முதல் தாள் (AT)

**வகுப்பு : 9** **நேரம் : $1^1/_2$ மணி**

**மதிப்பெண் : 40**

---

**குறிப்புகள்:**

- முதல் 15 நிமிடங்கள் சிந்தனை நேரமாகும்.
- வினாக்களையும் குறிப்புகளையும் கவனமாக வாசித்து விடையளிக்கவும்.
- (i), (ii) எனக் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விடையளிக்கவும்.
- விடையளிக்கும்போது மதிப்பெண் மற்றும் நேரத்தைக் கவனத்தில் கொள்ளவும்.

---

**I. 1, 2 ஆகிய வினாக்களுக்கு ஒரு மதிப்பெண் வீதம். (2 x 1 = 2)**
**சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுங்கள்.**

1. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் இடம்

அ) திருச்சி ஆ) தஞ்சை
இ) புதுக்கோட்டை ஈ) சேலம்

2. சத்திய ஞான சபையை நிறுவியவர்

அ) பாரதியார் ஆ) கம்பர்
இ) வள்ளலார் ஈ) வள்ளுவர்

**II. 3 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்கு இரண்டு மதிப்பெண்கள் வீதம். (3 x 2 = 6)**

3. ஏற்றபடி இணைத்து எழுதுங்கள்

| | | |
|---|---|---|
| (அ) தேவாரம் | – | முரஞ்சியூர் முடி நாகனார் |
| (ஆ) புறநானூறு | – | இளங்கோவடிகள் |
| (இ) சீவக சிந்தாமணி | – | சுந்தரர் |
| (ஈ) சிலப்பதிகாரம் | – | திருத்தக்கத் தேவர் |

4. 'வண்ண வண்ணப் பறவைகளாக' – இத்தொடரில் இடம்பெறும் அடுக்குத் தொடரைக் கண்டறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.

5. பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

(அ) பிரணவ் தமிழ்நாட்டில் உள்ள பாலக்காடு மாவட்டத்தில் பிறந்தார்.
(ஆ) பிரணவ் தன் கால் விரலால் எழுதவும் ஓவியங்கள் வரையவும் செய்வார்.
(இ) இவருக்குக் கைகள் இரண்டும் இல்லாததால் அலைபேசியைப் பயன்படுத்த முடிவதில்லை.
(ஈ) இவர் நன்றாக சைக்கிள் ஓட்டுவார்.

**III. 6 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு மூன்று மதிப்பெண்கள் வீதம். (5 x 3 = 15)**

6. (i) உங்கள் பள்ளியில் ஜூன் 19 அன்று இலக்கிய மன்ற விழா நடைபெற உள்ளது. நம்பிக்கை நாயகன் பிரணவ் அவர்கள் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார். இந்நிகழ்ச்சிக்கான சுவரொட்டி தயார் செய்யுங்கள்.

(அல்லது)

© State Assessment Cell SCERT, Kerala

(ii) பின்வரும் சொற்களை அகரவரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.

இடுக்கண், பீடு, துயில், தானை

7. "ஆறில்லாத ஊருக்கு அழகு பாழ்" – இப்பழமொழி விளக்கும் கருத்தைச் சிறுகுறிப்பாக எழுதுங்கள்.

8. 'எந்தப் பறவைக்கும்
இருக்க இடம் கொடுக்கும்
பொதுவுடைமை வீடுகள்'

(அ) இக்கவிதை வரிகளில் 'பொது உடைமை வீடுகள்' என்று ஆசிரியர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

(ஆ) அவ்வாறு குறிப்பிடுவதற்கான காரணம் யாது?

9. சமூகத்தில் வாழும் முதியோரைப் பாதுகாக்க உறுதி ஏற்கும் பொருட்டு பள்ளிக்காலைக் கூட்டத்தில் கூறுவதற்கான உறுதிமொழி தயார் செய்யுங்கள்.

10. 'செவ்வெண் கதிர் சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்ப' – இவ்வரியில் உள்ள அணியைச் சுட்டிக்காட்டி விளக்கி எழுதுங்கள்.

**IV. 11 முதல் 13 வரையுள்ள வினாக்களுக்கு நான்கு மதிப்பெண்கள் வீதம். (3 x 4 = 12)**

11. (i) பின்வரும் பாடலை நயம் பாராட்டி எழுதுங்கள்.

அறம் நாடு அருள்நாடு அன்பை நாடு
அடக்கத்தை ஆள்வினையை அறிவை நாடு
திறம் நாடு தெளிவான கொள்கை நாடு
திட்டமிட்டு செயலாற்றும் திட்பம் நாடு
இறவாத புகழ் நாடு எளிமை நாடு
எல்லாருக்கும் வழங்குகின்ற ஈகை நாடு.

(அல்லது)

(ii) பள்ளிக்கலை விழாவை முன்னிட்டு நடைபெறும் பேச்சுப்போட்டியில் உரையாற்ற 'வாழ்வை உயர்த்தும் தன்னம்பிக்கை' என்ற தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.

12. 'ராஜா வந்திருக்கிறார்' எனும் கதையில் இடம் பெறும் ராஜா என்ற கதாபாத்திரத்தின் பண்பு நலன்களை விளக்கி எழுதுங்கள்.

13. பாண்டிய நாட்டின் பஞ்சத்தைத் தீர்க்க பாண்டியன் நெடுஞ்செழியன் மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்கி எழுதுங்கள்.

**V. பின்வரும் வினாவிற்கு ஐந்து மதிப்பெண்கள் மட்டும். (1 x 5 = 5)**

14. (i) 'சில்லு மரத்துப்பட்டி' என்ற கதையை அதன் மையக்கருத்து, பாத்திரப்படைப்பு, மொழிநடை ஆகியவற்றின் அடிப்படையில் விமர்சனம் செய்யுங்கள்.

(அல்லது)

(ii) இன்று சமூகத்தில் மனிதநேய உணர்வுகள் நலிந்து வரும் நிலையைக்காண்கிறோம். மாணவர்களிடையே மனிதநேய உணர்வை வளர்க்கும் நோக்கில் பள்ளி இலக்கிய இதழில் வெளியிட தலையங்கம் தயார் செய்யுங்கள்.

© State Assessment Cell SCERT, Kerala